# தேவனுடைய உண்மையான மிகச்சிறந்த சித்தம்

## 3.10 பிறருக்கு உதாரத்துவமாகக் கொடுத்தல்




**வேத வசனம்:** **கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள். நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்.**

*லூக்கா 6:38*

**அறிக்கை:** நாம் பிறருக்குக் கொடுக்கும்போது, நிச்சயமாகவே திரும்பவும் பெற்றுக்கொள்ளுவோம்



**சத்தியம்:** தேவன் சொன்னார் வாங்குவதைப்பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம். நம் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி நம் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்

### வேதப் பகுதி: 2 கொரிந்தியர் 9:6-12., மல்கியா 3:8-10

**பாடம்**

**1. விதைத்தலும் அறுத்தலும்:** தேவனுக்கு ஒரு மாறாத குறிக்கோள் உண்டு: கொடு அப்பொழுது உனக்குக் கொடுக்கப்படும். நம்மிடம் உள்ளவைகளை நாம் பிறருக்குக் கொடுக்கும்போது தேவன் நம்மை ஆசீர்வதிக்கிறார். ஒரு சாட்சி: ஓர் ஆராதனையில் ஒரு பெண் தன்னிடம் கடைசியாக இருந்த 20 டாலர்களைக் காணிக்கையாக கொடுத்துவிடும்படி கர்த்தர் பேசுவதை உணர்ந்தாள். அவளுக்கு அந்தப்பணம் தேவைப்பட்டாலும் அவள் அதைக் கொடுத்தாள். அதே நாள் அந்தப் பணத்தைவிட பல மடங்கு அதிகமான அன்பின் காணிக்கையை அவள் பெற்றுக்கொண்டாள். (லூக்கா 6:38)

**2. தேவன் தசமபாகத்தின் கொள்கையை உருவாக்கினார்:** தேவன் தம்முடைய சபையில் காணிக்கை நியதியை நியமித்தார். சர்வ வல்ல தேவன் சொல்லுகிறார், "என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள். அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோ வென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள்". இது என்ன சொல்லுகிறது என்றால் வருமானத்தில் பத்து சதவிகிதத் தொகையைத் தேவனுடைய ஆலயத்தின் பண்ட சாலைக்குக் கோண்டுவரும்படி சொல்லுகிறது. அதாவது அது கர்த்தருடையது. அவ்விதம் செய்யாதவர்கள் தேவனுடையதை திருடுகிறவர்கள் என்று கருதப்படுவார்கள். தேவனை விசுவாசித்து அதனைச் செய்பவர்களையோ தேவன் நிரம்பி வழியத்தக்கதாக ஆசீர்வதிக்கிறார். அதோடு தெய்வீக பாதுகாப்பும் நம்பிக்கையையும் கொடுக்கிறார்.

**3. பகிர்ந்தளிக்காத ஒரு வாழ்க்கை:** நம்மிடம் உள்ள பணம் யாவும் விதைகள் என்று வேதம் சொல்லுகிறது. கொஞ்சம் விதைத்தால் கொஞ்சம் அறுப்போம். அதிகம் விதைத்தால் அதிகம் அறுப்போம். ஆகையால் தான் நாம் பிறருக்குக் கொடுக்கவேண்டும். (2 கொரி 9:6)

**4. உற்சாகமாகப் பகிர்ந்தளிக்கிற ஒரு வாழ்க்கை:** தேவையில் உள்ளவர்களுக்கு நம்மிடம் இருப்பவைகளைக் கொடுக்க விரும்பினால், தேவன் நம்மை உண்மையுள்ளவர்கள் என்று எண்ணி நம்மை அதிகம் ஆசீர்வதிப்பார். பழைய ஏற்பாட்டில் வாழ்ந்த யோசேப்பு மெய்யான உக்கிராணக்காரராகவும் அநேகருக்குப் பயனுள்ளவராகவும் வாழ்ந்தபடியால் தேவன் அவரை எகிப்து தேசத்தின் பிரதான மந்திரியாக நியமித்தார். (2 கொரிந்தியர் 9:8)

**5. நைல் நதியைப்போல இருங்கள்:** நைல் நதி மிகவும் பயனுள்ளது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஓடிக்கொண்டிருக்கிறது. அதன் தண்ணீர் அநேக மக்களுக்கு ஆசீர்வாதத்தின் முக்கிய காரணியாக இருந்து அவர்களுடைய தேவைகளைச் சந்தித்து வருகிறது. சவக்கடலோ அதின் தண்ணீர் வெளியேற வழி இல்லாததால் உள்ளேயே சிக்கிக்கொண்டு பயனற்றத் தண்ணீராகக் காணப்படுகிறது. அதில் அநேக கனிமங்கள் காணப்படுவதால் அது உப்புக்கடல் என்றும் அழைக்கப்படுகிறது. அதில் எந்த உயிரினமும் வாழ்வது இல்லை. நாம் சவக்கடலைப்போன்று இல்லாமல் நைல் நதியைப் போன்று இருக்கவேண்டும்.

**முடிவுரை:** தேவன் மகா பெரியவர் என்று நாம் விசுவாசிக்கவேண்டும். அவர் தம்முடைய மக்களுக்கு உதவிகள் செய்கிறவர். நாம் உற்சாகமாகக் கொடுப்பவர்காக இருந்து அநேகருடைய வாழ்வில் ஆசீர்வாதத்தைக் கொண்டுவருவோம்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.